1978 மார்ச் 20]

கோவை புதூரில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு.

*631 வினு—திரு ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா —

பேரூர் ஒன்றியம், குனியமுத்தூர் பேரூராட்சியில் உள்ள கோவை-புதூரில் குடிதண்ணீர் தட்டுப்பாட்டினை நீக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கோவை-புதூரில் 1977—78-ம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ஓர் ஆழ்துளைக் கிணறு போடப்பட்டு இதில் கைப்பம்பும் பொறுத்தப் பட்டுள்ளது. இவ்வூர் நல்ல குடிநீர் கிடைக்கும் குடியிருப்பு என வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், கோவை சிறுவாணி குடி நீர்த் திட்டத்தினுல் பயன் பெறவிருக்கும் ஊர்களில் கோவை-புதூரும் ஒன்ருகும்.

திரு ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்பு மிகு அமைச்சரவர்கள் குழாய்க் கிணறு போடப்பட்டிருப்பதாகவும் கை பம்பு போடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். அதற்கு உடனடியாக விசை மோட்டார் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, கோவை-புதூருக்குச் சிறுவாணித் திட்டத்தின் கீழ் தண்ணீர் கொடுக்கின்ற காரணத்தினுல் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : பேரவைத் தலைவரவர்களே, பேரூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட கோவை-புதூரில் இந்த நேரத்தில் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. அதே போல் பேரூராட்சி பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்டு இருக்கக்கூடிய பல பஞ்சா யத்துக்களிலும் சிங்காநல்லூர் நகராட்சியிலுள்ள பகுதிகளிலும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவ்வாறு தண்ணீர்த் தட்டுப்பாட்டினுல் கஷ்டப்படுகின்ற ஜனங்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்காக லாரிகளிலும், டிரக்குகளிலும் தண்ணீர் கொண்டுவரப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. அதனை முறையாகச் செய்வதற்கு நட வடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவ ரவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

திரு கு. ரமணி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்ச ரவர்கள் கோவை-புதூர் நன்ருகத் தண்ணீர் கிடைக்கக்கூடிய இடம் என்று குறிப்பிட்டார். ஆனுல் அங்கே ஒரு

[1978 மார்ச் 20

மலையடிவாரத்தில் அந்தக் கோவை-புதூர் அமைக்கப்பட்டுள்ளது. சிறுவாணிக் குடிநீர் வந்தால்தான் அங்கே தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கும் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா, என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே, இந்தக் கஷ்ட காலத்தில் வேறு வகையில் தண்ணீர் தருவதற்கு பிரத்தியேகமான ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றியெல்லாம் ஆலோசனை செய்து பார்க்கலாம்.

திரு ஆ. நடராசன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சிறுவாணித் திட்டம் பற்றித் தெரிவித்தார்கள். அதை நிறைவேற்றுவதற்கு இரண்டாண்டு காலம் ஆகும் என்கிற காரணத்தினால் அங்கே இருக்கக்கூடிய குழாய்க் கிணறுகளுக்கு விசை மோட்டார் பொறுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு அங்கே நபர் ஒன்றுக்கு எவ்வளவு காலன் நீர் கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இதைப்பற்றி அரசுக்கு வேண்டுகோள் கொடுத்தால் பரிசீலித்துப் பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, சிறுவாணிக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக கோவை—புதூருக்கு தண்ணீர் வருகின்ற வழியிலே இருக்கக்கூடிய கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, எந்தெந்த கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்ற தகவல்கள் எல்லாம் இருக்கின்றன, தனிக் கேள்வி போட்டால் அதற்குச் சரியான விடை தரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Supply of Drinking Water in Nagappattinam Municipality

632 Q.—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether the Government are aware that the drinking water supply system in Nagappattinam Municipality is very very old leading to constant breakdown, lean supply in certain parts and no supply in certain other parts;